# சாகித்ய கரிசல் இலக்கிய வாதிகளும் பொதுச் சொல்லாடல்களும்

# Sahitya Karisal Literateurs and Public Discourses

**க. வாணிதேவி**
உதவிப் பேராசிரியை
இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி

**K. Vanidevi**
*Assistant Professor*
*Rajapalayam Raju's College*
*Rajapalayam*

## ஆய்வுச் சுருக்கம்

*இருபதாம் நூற்றாண்டை தமிழ் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். மேலைநாட்டு இலக்கிய தாக்கங்களினால் தமிழில் புதிய இலக்கிய வடிவங்கள் பல தோன்றின. மேலை நாட்டு பண்பாட்டுத் தொடர்பும் சமூக அரசியல் வாழ்வும் தமிழ் மொழி வாழ்விலும் பல தாக்கங்களை உருவாக்கின. நாட்டுப்புற இலக்கியங்கள் தமிழில் முன்பே இருந்தாலும் அவை அனைத்திற்கும் அச்சுப் பிரதி என்ற புத்துயிர் கொடுத்தது 19,20ஆம் நூற்றாண்டுகள் தான் என்றால் அது மிகையாகாது. படைப்பாளனின் எண்ணத்திற்கும் உணர்ச்சிக்கும் எழுத்து நடைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எழுத்தாளுமை என்பது மனதின் வளர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் வடிகால் என்றே கூறலாம்.*

***முக்கியச்சொற்கள்:*** *சாகித்ய அகாதமி, கரிசல் இலக்கியங்கள், தாய்மொழி, கரிசல் வட்டாரமொழி*

## Abstract

*The 20th century can be termed as a renaissance period in the history of Tamil literature. Due to the influences of western literature, many new literary forms emerged in Tamil. Western cultural links and socio-political life had many influences on the life of the Tamil language. It would not be an exaggeration to say that it was the 19th and 20th centuries that revived folk literature in Tamil, even though they were already in Tamil. There is a close connection between the thought and emotion of the creator and the style of writing. Writing is a drain on the growth and emotion of the mind.*

***Keywords:*** *Sahitya Akademi, Karisal Literature, Mother Tongue, Karisal Vernacular*

**Citation**

Vanidevi, K. "Sahitya Karisal Literateurs and Public Discourses." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 64–68.

*இருபதாம் நூற்றாண்டை தமிழ் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். மேலைநாட்டு இலக்கிய தாக்கங்களினால் தமிழில் புதிய இலக்கிய வடிவங்கள் பல தோன்றின. மேலை நாட்டு பண்பாட்டுத் தொடர்பும் சமூக அரசியல் வாழ்வும் தமிழ் மொழி வாழ்விலும் பல தாக்கங்களை உருவாக்கின. நாட்டுப்புற இலக்கியங்கள் தமிழில் முன்பே இருந்தாலும் அவை அனைத்திற்கும் அச்சுப்பிரதி என்ற புத்துயிர் கொடுத்தது 19,20ஆம் நூற்றாண்டுகள் தான் என்றால் அதுமிகையாகாது. படைப்பாளனின் எண்ணத்திற்கும் உணர்ச்சிக்கும் எழுத்து நடைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. . எழுத்தாளுமை என்பது மனதின் வளர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் வடிகால் என்றே கூறலாம்.*

**கரிசல் வட்டார எல்லை**

*ராமநாதபுரம், தூத்துக்குடி, கோவில்பட்டி, நெல்லை, தென்காசி, விருதுநகர் என மேற்கு தொடர்ச்சி மலை எல்லை வரை கரிசல் பூமி பரந்து விரிந்து காணப்படுகின்றது. இந்த மண் நீர்வளம் மிக்க பகுதி அல்ல மழைக்காக காத்திருக்கும் வானம் பார்த்த பூமி. இங்கு கம்பு, சோளம், கேழ்வரகு, குதிரை வாலி, தணியா, தினை, அவரை, துவரை என பல தானியங்களும் பருத்தி, சணல் போன்ற பணப்பயிர்களும் விளையும் இடங்களாகும். இங்குள்ள மக்களின் வாழ்க்கை, வறட்சி மற்றும் கடின உழைப்பை எடுத்துக்கூறும் வாழ்வியல் இலக்கியங்களே கரிசல் இலக்கியங்கள் என்ற பெயர் பெறும். மண்வாசம் நிறைந்த இலக்கியங்கள் படைத்து உயரிய தேசிய விருதான சாகித்ய அகாதமி விருதுகள் பெற்ற இம்மண்ணின் எழுத்தாளர்கள் ஒரு சிலரை பற்றி இக்கட்டுரையில் காண்போம். மேலும் கரிசல் வட்டார பொதுவான சில செ ால்லாடல்கள் பற்றியும் நாம் ஆராய இருக்கின்றோம்.*

**தாய்மொழிவட்டார மொழி**

*தாய்மொழி என்பது குழந்தையின் கருவிலேயே தொடங்கி உருவிலேயே வளர்ந்து மரணம் வரை தொடர்ந்து வருவது. தாய்மொழியே நமது ஒவ்வொருவரின் மூளையையும் உருவாக்கியது எனலாம். நாம் பேசும் பேச்சு, எழுதும் எழுத்து என்னும் எண்ணம் அனைத்திலும் நம் மூச்சுக் காற்று போல் நம்மொழி நடை உள்ளது. தாய்மண்ணின் வாசம் வீசும் தாய்ப்பாலில் யாரும் குறை காணமுடியாது. அது போல தமிழ்மொழி தந்த வட்டார வழக்கிலும் குறை காணமுடியாது. அவ்வாறு குறை கண்டால் அது மனதின் கோளாறு என்றே கொள்ள வேண்டும்.*

***தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்***
***தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்***

*என்றார் பாரதிதாசன்.*

*உயிரின் உணர்வுகள் அனைவருக்கும் புரியும் இக்கால கட்டத்தில் எளிமையான வட்டார வழக்குகளால் மட்டுமே உவமைகள் உதாரணங்கள் மூலமாக சமூக கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும். ஒவ்வொரு வட்டாரத்திலும் பேசும் பேச்சு வழக்கு நடைவாசகர்களின் வாசிப்பில் சலிப்புத் தன்மை ஏற்படாமல் இருக்கவும் ஆர்வத்தை தூண்டவும் பயன்படுகிறது. இதுவே எழுத்தாளனின் நடையாகும் போது மதுரை தமிழ்நடை, நெல்லை தமிழ்நடை, கொங்கு தமிழ் நடை என என பல வட்டார நடை இலக்கியங்கள் தமிழில் உள்ளன.*

**பட்டறிவு அனுபவ மொழியறிவு**

*மனிதன் கேட்டில் படித்து கல்வி பெறுவது பட்டறிவு ஆகும். அவனுள் இயல்பாக அமைவது பட்டு உணரும் அனுபவ அறிவாகும். கரிசல் வட்டார எழுத்தாளர்கள் பலர் அனுபவங்களின் வழியாக தனது படைப்பினை செய்து இலக்கிய விருதுகளையும் பெற்றுள்ளனர். அவ்விலக்கிய வாதிகளின் படைப்புகள் பல பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.*

**சாகித்ய அகாதமிவிருது**

*இந்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் 24 மொழிலக்கியத்திற்கான விருது மார்ச் 12 1954 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் விருது வழங்குவதோடு மட்டுமல்லாமல் இலக்கியக் கூட்டங்களும் பயிற்சி முகாம்களும் சிறந்த படைப்புகளை மொழி பெயர்த்து வெளியிடுவதும் ஆகிய பல்வேறு பணிகளை செய்து வருகின்றது. இந்நிறுவனத்தின் மூலம் பாஷாசம்மான் விருது, பால புரஸ்கார் விருது, யுவபுரஸ்கார் விருது, மொழி பெயர்ப்பு விருது எனப் பல விருதுகள் அளிக்கப்படுகின்றது. முதலில் 5000 ரூபாய் பண முடிப்பு வழங்கப்பட்ட இவ்விருது இன்று ஒரு லட்ச ரூபாய் பரிசும் பாராட்டு பட்டயமும் அளித்து இலக்கிய வாதிகளை சிறப்பிக்கின்றது. 1955ல் திருநெல்வேலியைச் சார்ந்த ராபி சேதுப்பிள்ளையின் தமிழ் இன்பம் என்னும் கட்டுரையிலிருந்து சாகித்ய அகாதமி விருது தொடங்குகிறது.*

**கு அழகிரி சாமி நெல்லை மாவட்டம்**

*இந்த உலகமும் ஊடகங்களும் புறக்கணித்த கிராமிய நடையில் தனது தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தார். நெல்லை மாவட்டம் இடை செவல் என்னும் கிராமத்தை சேர்ந்த அழகிரிசாமியின் பெற்றோர்குருசாமி; தாயம்மாள். 1970இல் அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுதிக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றார் இவர் வறுமையின் காரணமாக பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் ஆவார். கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் என பலதுறைகளிலும் தனது கால்பதித்தார். தமிழ்நேசன், சக்தி, சோவியத் நாடு போன்ற பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார்*

**கி ராஜநாராயணன் நெல்லை மாவட்டம்**

*கரிசல் இலக்கியத்தின் தந்தை, பிதாமகன் என்றெல்லாம் போற்றப்படும் கி.ரா இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர். அழகிரிசாமியின் நண்பர் ஆவார். பெற்றோர்ஸ்ரீகிருஷ்ணராமானுஜம்; லட்சுமி. 1990தில் கோபல்லபுரத்து மக்கள் என்னும் நூலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்பு பேராசிரியராக பணியாற்றினார். இவர் தனது பேட்டியில் ஒரு நாள் மழைக்காக பள்ளியின் பக்கம் ஒதுங்கினேன். மழையை ரசித்தேன் என்றார். கரிசல் வட்டார வழக்கு அகராதியை தொகுத்தார். இவரது நூல்கள் ஆங்கிலம், இந்தி, பிரஞ்சு ஆகிய மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது*

**பூமணிதூத்துக்குடி மாவட்டம்**

*பூமணி என்ற பெயரில் வாசகர்களுக்கு அதிகம் அறிமுகமான இவரின் இயற்பெயர் பூமணிவாசகம் என்பதாகும். கோவில்பட்டிக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டி என்னும் ஊரை சேர்ந்தவர். பெற்றோர் பூலித்துரை, தேனம்மை. கரிசல் மக்களின் எதார்த்த வாழ்க்கையை படம் பிடித்து தனது படைப்பில் காட்டியுள்ள பெருமை இவரைச் சாரும். 2014ஆம் ஆண்டு*

*அஞ்ஞாடி நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றார். இவரது கல்லூரி காலத்தில் கீழ உடன் கொண்டிருந்த நட்பு இவரை கரிசல் இலக்கிய உலகில் பிரவேசிக்கச் செய்தது. இவரின் கதைகளில் சடவு ஒழுங்கு சவடால் போன்ற வட்டார வழக்குகள் அதிகம் காணப்படுகின்றது சடவுவருத்தம் கலந்த கோபம்.*

***ஒலுங்கு கொசுவின் வகை.***
***சவடால்தற்பெருமை.***

**சோ.தர்மன் தூத்துக்குடி மாவட்டம்**

*கோவில்பட்டிக்கு அருகில் உள்ள உருளைகுடி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். தூர்வை முதலான மூன்று நாவல்கள் எழுதியவர். இவரின் 2016 வெளியான சூல்நாவலுக்கு 2019இல் சாகித்திய அகாதமி விருது கிடைத்தது. படைப்பு விற்பனை ஆகிறதா என்பதை விட வாசிக்கப்படுகின்றதா? என்பதே முக்கியம் என்னும் கொள்கை உடையவர் தர்மன்.*

**மு.கு. ஜகந்நாதராஜா விருதுநகர் மாவட்டம்**

*"பன்மொழிப்புலவர்" என்ற பட்டம் பெற்ற இவர் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தை சேர்ந்தவர். பெற்றோர்குமாரசாமிராஜா அம்மணியம்மாள். 1989இல் அமுத்த மால்யத என்ற கிருஷ்ணதேவராயரின் தெலுங்கு காவிய மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி பரிசினைப் பெற்றார். இவர் மொழிபெயர்ப்பு என்னும் களத்தில் மட்டும் இயங்கிய வரல்ல. கரிசல் மண்ணின் குழந்தை இலக்கியமாக பிஞ்சுக் கரங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பையும் இவர் படைத்துள்ளார். இந்நூல் ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களின் அவலங்கள் பேசும் வகையில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி முதலில் பெற்றவர் இவர்.*

***புளுகன் பேச்சு ஒரு நாள் கடலில் தீப்பிடிக்க***
***ஓடிச் சென்றேன் அணைத்திட புளுகு சொற்களின் தொகுப்பு.***

**கோ.மாகோதண்டம் விருதுநகர் மாவட்டம்**

*இருபதாம் நூற்றாண்டில் "குறிஞ்சி கபிலர்" என போற்றப்படும் கொ.மா.கோதண்டம் ராஜபாளையத்தை சேர்ந்தவர். இவர்தனது வாழ்வை பஞ்சாலைத் தொழிலாளியாக துவங்கியவர். நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். 2012 இவர் எழுதிய காட்டுக்குள்ளே இசைவிழா என்ற சிறுவர் நூலுக்கு சாகித்திய அகாதமியின் பாலபுரஸ்கார் விருது வழங்கப்பட்டது. இதுவரை நடராஜன், செல்வ கணபதி, கதிரேசன், சபரிநாதன், தேவி நாச்சியப்பன் ஆகியோர் பால புரஸ்கார் விருது வாங்கியவர்ளாவர். நாவல், சிறுகதை, நாடகம் என பலவற்றிலும் தனது படைப்புத் திறனை காட்டியுள்ளார்.*

**மேலாண்மை பொன்னுச்சாமி விருதுநகர் மாவட்டம்**

*மேலாண் மறைநாடு முன்பு ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்தது. இவரும் பள்ளி சென்று அதிகம் படிக்காதவர் ஆவார். 2007 மின்சாரப்பூ என்ற சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார் 24 சிறுகதைத் தொகுப்புகள் ஆறு நாவல்கள் குறுநாவல்கள் கட்டுரைத் தொகுப்பு என 36 நூல்கள் இயற்றியுள்ளார் தன் எழுத்துக்களின் மூலம் எளிய மக்களின் வாழ்வை பதிவு செய்தவர் ஆவார். தாட்டியம் வீரம் உடல் உழைப்பிலும் மிகவும்*

*தைரியமானவர் வன்மை மிக்கவர்.. வங்கெழுடுவலிமை வாய்ந்த கிழப்பருவம் எழுதிய ஆண்களையும் பெண்களையும் குறிக்கும் சொல்.*

**தேவதாஸ் விருதுநகர் மாவட்டம்**

*ராஜபாளையம் அருகே உள்ள நடையை சேர்ந்தவர். இவர் கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றார். 2014ஆம் ஆண்டு லடாக்கிலிருந்து கவிழும் நிழல் என்ற சாமானிய பட்டாச்சார்யா எழுதிய* The shadow over Ladakh *என்ற நூலின் மொழி பெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றார். இவர் 25 நூல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார் எனது எழுத்துப் பணிக்கு கிடைத்த அங்கீகாரம் என சாகித்ய அகாடமி விருதினை ஏற்று கொண்டார். இந்திய சீன போர் பற்றிய செய்திகளையும் காந்திய பொருளாதாரம் மற்றும் நவீன பொருளாதாரம் பற்றியும் இந்நூல் விளக்குகிறது. இவர் வட்டார நடையை மொழிபெயர்ப்பது கடினம் என்கிறார்.*

**எஸ் ராமகிருஷ்ணன் விருதுநகர் மாவட்டம்**

*மல்லாங்கிணறு பகுதியை சேர்ந்தவர். பெற்றோர் சண்முகம் மங்கையற்கரசி சிறந்த விமர்சகராகவும் இலக்கிய வாதியாகவும் இருக்கும் இவர் கரிசல் பூமியின் பின்னணியில் அமைந்திருக்கும் நாதஸ்வர கலைஞர்களின் வாழ்க்கை பற்றிய நாவலை எழுதியுள்ளார் 2018 சஞ்சாரம் என்னும் நாவலுக்கு சாகித்ய அகாதமி பரிசு பெற்றார்*

**தொகுப்புரை**

*இன்றைய சமூகத்திற்கு எளிமையான பயன்பாட்டிற்கு உதவும் கரிசல் வட்டார வழக்கு நடைமக்களிடம் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும் குறிக்கோளை பிர கடனப் படுத்தும் ஏற்றதாக அமைகின்றது. இந்த நடையையே சமீபகாலமாக தகவல் தொடர்பு சாதனங்களும் கடைப்பிடிக்கின்றன. வட்டார நடையின் கருத்துக்கள் மக்கள் மனதில் ஆணித்தரமாக பதிகின்றது பொய்யும் கவர்ச்சியும் ஏமாற்றமும் கொண்டு நிம்மதியற்ற வாழ்வை இழக்கும் பலர் இவ்விலக்கியங்கள் மூலம் சிறந்த தொரு வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்கின்றனர். அன்பு, பாசம், கருணை என பல குணங்களை கதைகள் மற்றும் கவிதைகள் நாடகங்கள் மூலம் கரிசல் இலக்கியங்கள் நமக்கு அடையாளம் காட்டுகின்றன.*

**ஆதாரங்கள்**

1. பாரதிதாசன் கவிதைகள்
2. விக்கிப்பீடியா
3. ஆ புத்திர காவியம்
4. பூமன சுனை (சிறுகதை)

## References

1. Bharathidasan Poems
2. Aa Putra Kavyam
3. Poomana Sunai (short story)